# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை—600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் **34/2019** நாள் **24.12.2019**

சாதாரண உள்ளாட்சித் தேர்தல்–2019

இன்று (24.12.2019) சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா.பழனிசாமி,இ.ஆ.ப.(ஓ) அவர்கள் தலைமையில் ஊரக உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), முனைவர் கி.ஜெயந்த் முரளி, இ.கா.ப., காவல் துறை தலைவர் (தேர்தல்) திரு.ச.ந.சேஷசாய்,இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் (தேர்தல்) திருமதி.ப.கண்ணம்மாள்,இ.கா.ப. மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஊரக உள்ளாட்சித் தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் அமைதியாகவும் நடத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. பதற்றமான மற்றும் பிரச்சனைக்குரிய வாக்குச்சாவடிகளில் பாதுகாப்பை அதிகப்படுத்துதல், கூடுதல் காவலர்களை நியமித்தல், சோதனைச் சாவடிகள் அமைத்தல், வாக்கு

எண்ணிக்கை மையங்களில் மூன்றடுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துதல், மொபைல் டீம் அமைத்தல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. இத்தேர்தலில் 27.12.2019 அன்று நடைபெறும் முதல் கட்ட வாக்குப்பதிவின் போது 60,918 காவல்துறையினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஊர்க் காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். 30.12.2019 அன்று நடைபெறும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவின் போது 61,004 காவல்துறையினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் ஊர்க் காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மேலும், முதல்கட்ட தேர்தல் நடைபெறும் பகுதிகளில் 25.12.2019 மாலை 05.00 மணிக்குப் பின்னரும், இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறும் பகுதிகளில் 28.12.2019 மாலை 05.00 மணிக்குப் பின்னரும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பில் வாக்காளர்கள் அல்லாத, வெளியிலிருந்து அழைத்து வரப்படும் அரசியல் கட்சி பிரமுகர்கள் / கட்சித் தொண்டர்கள் அனைவரும் அந்த உள்ளாட்சி பகுதியில் இருந்து வெளியேறிவிட வேண்டுமென்றும் அவ்வாறு வெளியேறாதவர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின் படி உரிய நடவடிக்கை எடுக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

24/12/19

மக்கள் தொடர்பு அலுவலர்